THE HINDU - ENGLISH
Dated: 05.12.2024

# Will decide on AIADMK's symbol in four weeks, EC tells Madras High Court

Mohamed Imranullah S.
CHENNAI


The commission had received a reply from the AIADMK.
FILE PHOTO

The Election Commission of India (EC) on Wednesday informed the Madras High Court that it shall take a decision within four weeks on a plea made by an individual opposing the allotment of the 'Two Leaves' symbol to candidates proposed by All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK) general secretary Edappadi K. Palaniswami.

A Division Bench of Justices R. Subramanian and C. Kumarappan recorded the submission of the EC standing counsel Niranjan Rajagopalan that it had served notice on the AIADMK, pursuant to the receipt of the representation from S. Surya Moorthi of Dindigul, who claimed to be a member of the party, on February 12, 2024.

The AIADMK had submitted its response to the notice and therefore, the commission would take a decision on the issue within an outer limit of four weeks, the counsel told the court. The judges recorded his submission and disposed of a writ petition filed by the individual seeking a direction to the EC to consider his representation.

When senior counsel P.H. Arvindh Pandian, representing expelled AIADMK leader O. Panneerselvam, said no notice had been issued to him though he was the most important party involved in the leadership dispute, the judges demanded that the commission hear all parties concerned before arriving at a conclusion.

Earlier, when the judges wanted to know what more was left to be decided when the High Court had passed certain orders with respect to the party leadership and it had also been confirmed by the Supreme Court, Mr. Rajagopalan said, only interim orders had been passed so far and that the main civil suits were still pending in the High Court. It was brought to the notice of the Division Bench that though multiple civil suits had been filed in the High Court challenging the conduct of the party's general council and the resolutions passed in the council meetings, so far, only interim applications had been disposed of and the orders passed had been dealt with by the Supreme Court.

Insofar as the present writ petition filed before the conduct of the Parliamentary elections in April this year is concerned, "the commission has instructed me that they have issued a notice to AIADMK and a reply has also been received..." Mr. Rajagopalan told the court.

D.T. NEXT
Dated: 05.12.2024

# No 'surge' in last hour of poll: EC

**MUMBAI:** Maharashtra's Chief Electoral Officer S Chockalingam has said the seven per cent increase in voter turnout in the last hour of polling for the state assembly elections was not a surge, as claimed by the opposition, but an "average" process.

In a video statement on Monday, Chockaligam said Maharashtra is a large state with more than one lakh polling booths.

"If 76 lakh voters turn up in the last hour of polling, it is only (an average of) 76 voters in each of the polling centres," he added. While the BJP-led Mahayuti won 230 of the 288 seats in Maharashtra, the JMM-led alliance bagged 56 seats in the 81-member Jharkhand assembly.

Jharkhand is a small state compared to Maharashtra and its voting ends at 5 pm, whereas voting in Maharashtra is allowed till 6 pm and those in queue at that time can cast vote, he noted.

'In Maharashtra, 50 to 60 persons have voted per hour, " the state CEO said.

Chockaligam also refuted concerns raised by the opposition parties over the Electronic Voting Machines (EVMs), saying they are technically reliable and transparent.

Candidates can approach the high court, if they have a doubt, within 10 days of declaration of the result, he added.

# Plea on freezing of 'two leaves' will be disposed of in 4 weeks: EC informs HC

**CHENNAI: The Madras High Court directed the Election Commission of India (ECI) to dispose of the representation seeking to freeze the 'two leaves' symbol of AIADMK after hearing all the parties including O Panneerselvam (OPS).**

A division bench of Justice R Subramanian and Justice C Kumarappan heard a petition moved by S Surya Moorthi from Dindigul, seeking to direct the ECI to freeze the symbol until the disposal of civil suits filed against the party.

The bench wondered about the necessity to file the petition since AIADMK symbol matter was already settled by the Supreme Court.

The petitioner submitted that since he filed civil suits against the leaders of the party including Edappadi K Palaniswami (EPS) and OPS, the symbol should be freezed until the disposal of the suits.

Niranjan Rajagopalan, the standing counsel for ECI submitted that the commission has already issued notice to the party in this regard and a final order will be issued within four weeks.


Senior counsel Arvind Pandian for OPS submitted that since his client is also a respondent in the civil suits, no notice was issued to him.

After all the submissions the bench directed ECI to dispose of the matter after hearing all the respondents.

The petitioner claiming himself as a member of AIADMK, submitted that from 2017 to 2022 various complaints were lodged by him before the ECI regarding the AIADMK internal issue and allotment of two leaves, however, the commission failed to take any action.

He alleged that after the demise of late Chief Minister and general secretary of AIADMK J Jayalalithaa, the party is functioning in a dictatorial manner against the rules and regulations of the party. Hence, he filed various civil suits, which is still pending before the city civil court, Chennai, said the petitioner.

Till the disposal of the pending civil suits, the ECI should not allocate the two leaves symbol to AIADMK or any other factions, he added.



THE HINDU - TAMIL
Dated: 05.12.2024

அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க எதிர்ப்பு தெரிவித்து வழக்கு

# ஓ.பன்னீர்செல்வத்தின் கருத்தையும் கேட்க தேர்தல் ஆணையத்துக்கு நீதிமன்றம் உத்தரவு

சென்னை

நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கில், ஓபிஎஸ் உள்ளிட்ட அனைவரது கருத்துகளையும் கேட்டு4வாரங்களில்முடிவுஎடுக்க வேண்டுமென இந்திய தலைமை தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர்சென்னைஉயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 'அதிமுகவில் நிலவும் உள்கட்சி விவகாரம் தொடர்பாகவும், கட்சியின் விதிகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் எதிராக சிலர் நடந்து கொண்டது குறித்தும் இந்திய தலைமை தேர்தல் ஆணையத்துக்கு கடந்த 2017 முதல் 2022 வரை பல்வேறு புகார் மனுக்களை அனுப்பியுள்ளேன்.

### உரிமையியல் வழக்கு

அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக நான் தொடர்ந்துள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்குஇரட்டைஇலைசின்னத்தை ஒதுக்கக்கூடாது என வலியுறுத்தி தேர்தல் ஆணையத்துக்கு நான் அளித்த மனுவுக்கு இதுவரை எந்த பதிலும் வரவில்லை. எனவே இரட்டை இலை சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு நான் அளித்துள்ள மனு மீது உரிய விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்நிரஞ்சன்ராஜகோபாலன், மனுதாரர் இரட்டை இலை சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு அளித்த மனு மீது, அதிமுகவுக்கு நோட்டீஸ் அனுப்பி பதில் வாங்கியுள்ளோம். விரைவில் இதுதொடர்பாக முடிவெடுக்கப்படும் என்றார்.

அப்போதுஇந்தவழக்கில்எதிர் மனுதாரராக உள்ள ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.எச்.அரவிந்த் பாண்டியன், வழக்கறிஞர் சி.திருமாறன் ஆகியோர், "இரட்டை இலை சின்னம் தொடர்பான விவகாரத்தில் தங்களது தரப்புக்கு தேர்தல் ஆணையம் எந்தவொரு நோட்டீஸையும் இதுவரையிலும் அனுப்பவில்லை. இந்த வழக்கில் நாங்களும் எதிர்மனுதாரர்களாக இருக்கும்போது கண்டிப்பாக எங்களுக்கும்நோட்டீஸ் அனுப்பி, எங்களது கருத்துகளையும் கோர வேண்டும். அதன்பிறகே இரட்டை இலை சின்னம் தொடர்பாக எந்த முடிவையும் எடுக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என வாதிட்டனர்.

### 4 வாரத்தில் உரிய முடிவு

அதையேற்ற நீதிபதிகள், இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக உள்ள ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைவரது கருத்துகளையும் கேட்டு 4 வாரங்களில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக உரிய முடிவெடுக்க வேண்டும்எனதலைமைதேர்தல்ஆணையத்துக்கு உத்தரவிட்டுள்ளனர்.

# மாலை 5 மணிக்கு பிறகு 7.8% வாக்குப்பதிவு வழக்கமானதே

## மகாராஷ்டிர தேர்தல் அதிகாரி விளக்கம்

மும்பை

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி 48 இடங்களில் மட்டுமே வென்றது.

இதையடுத்து தேர்தல் முடிவுகளில் முரண்பாடுகள் இருப்பதாகவும் இதுகுறித்து விசாரிக்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் கடிதம் எழுதியது. இதில் கடைசி 1 மணி நேரத்தில் 76 லட்சம் வாக்குகள் பதிவானதை நம்ப முடியவில்லை என்று கூறியிருந்தது. இந்நிலையில் தேர்தல் ஆணைய தரவுகள் இது சராசரி வாக்குப் பதிவுதான் என காட்டுகிறது.

மகாராஷ்டிர தேர்தலில் முதல் 2 மணி நேரம் வாக்குப் பதிவு மந்தமாக இருந்ததால் 6.6% வாக்குகள் மட்டுமே பதிவானது. பிறகு காலை 9 முதல் 11 மணி வரை இது 11.5% ஆகவும் காலை 11 முதல் மதியம் 1 மணி வரை 14% ஆகவும் அதிகரித்தது. பிறகு மதியம் 1 மணி முதல் 3 மணி வரை இது 13.3% ஆக இருந்தது. மாலை 5 மணி முதல் வாக்குப்பதிவு முடியும் வரை 7.8% வாக்குகள் பதிவானது. மாலை 6 மணிக்குப் பிறகும் வரிசையில் நிற்கும் அனைவரும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவதால் வாக்கு சதவீதம் அதிகமாக உள்ளது.

இதுகுறித்து மாநில தலைமை தேர்தல் அதிகாரி எஸ்.சொக்கலிங்கம் கூறுகையில், "மாலை 5 மணிக்கு பிறகு வாக்களிப்பு சதவீதம் அதிகரிப்பானது, பகலில் வாக்களிப்பு அதிகரிப்புடன் ஒத்துப் போகிறது. 2019 சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2024 மக்களவைத் தேர்தலுடன் ஒப்பிட்டால் இதே போக்குதான் காணப்படுகிறது" என்றார்.

DAILY THANTHI

Dated: 05.12.2024

அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கிய விவகாரம்:

# எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் கருத்துகளை கேட்க வேண்டும்

## தேர்தல் ஆணையத்துக்கு ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, டிச.5-

அ.தி.மு.க.வுக்கு,இரட்டை இலை சின்னம் ஒதுக்குவது குறித்து எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம் தரப்பின் விளக்கத்தை கேட்டு 4 வாரத்துக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது.

### இரட்டை இலை

சென்னை ஐகோர்ட்டில், திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், அ.தி.மு.க.வின் உள்கட்சி விவகாரம் தொடர்பாகவும், கட்சியின் சட்டத்திட்டங்களுக்கு விரோதமாக செயல்பட்டது தொடர்பாகவும் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு கடந்த 2017-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டுவரை பலபுகார்களை அனுப்பியுள்ளேன்.

அ.தி.மு.க., உள்கட்சி தொடர்பாக சிவில் கோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன. அந்த வழக்குகள் முடிவுக்கு வரும்வரை இரட்டை இலைசின்னத்தை அ.தி.மு.க, வுக்கு ஒதுக்கக்கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு மனு அனுப்பினேன். இந்த மனுவை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

### ஓ.பன்னீர்செல்வம் கருத்து

இந்த மனு நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வக்கில் நிரஞ்சன் ராஜகோபால், மனுதாரரின் மனு தொடர்பாக அ.தி.மு.க.வுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அ.தி.மு.க.வும் பதில் அளித்துள்ளது. இதன்படி, மனுதாரர் மனு விரைவில் முடிவு எடுக்கப்படும்" என்று கூறினர்.

ஓ.பன்னீர்செல்வம் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் அரவிந்த் பாண்டியன், வக்கீல் சி.திருமாறன் ஆகியோர் ஆஜராகி, "இந்த விவகாரத்தில் ஓ.பன்னீர்செல்வம் தரப்பின் கருத்தை தேர்தல் ஆணையம் இதுவரை கேட்கவில்லை. எனவே, ஓ.பன்னீர்செல்வம் தரப்பின் கருத்தை கேட்ட பிறகே முடிவு எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்று வாதிட்டனர்.

### 4 வாரத்தில் முடிவு

இதையடுத்து நீதிபதிகள், "மனுதாரரின் மனு மீது இந்திய தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தும்போது, இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரது கருத்துக்களை கேட்டு, 4 வாரத்துக்குள் இந்திய தேர்தல் ஆணையம் தகுந்த முடிவை எடுக்க வேண்டும். இந்த வழக்கை முடித்து வைக்கிறோம்" என்று உத்தரவிட்டனர்.

Dinamalar

Date: 05.12.2024

# இரட்டை இலை ஒதுக்க எதிர்ப்பு ஆணையம் முடிவெடுக்க உத்தரவு

சென்னை, டிச. 5–

நிலுவையில் உள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.,வுக்கு ஒதுக்க தடை கோரிய விண்ணப்பத்தின் மீது, நான்கு வாரங்களில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்க, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தாக்கல் செய்த மனுவில், 'அ.தி.மு.க.,வில் உட்கட்சி விவகாரம், கட்சி விதிகளுக்கு முரணாக செயல்பட்டது தொடர்பாக, 2017 முதல் 2022 வரை பல புகார்களை, தேர்தல் ஆணையத்துக்கு அளித்துள்ளேன்.

'கட்சி பிரச்னை தொடர்பாக தாக்கல் செய்துள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.,வுக்கு ஒதுக்கக்கூடாது எனவும், தேர்தல் ஆணையத்திடம் கோரி உள்ளேன்; ஆணைய தரப்பிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

'என் மனு மீது விசாரணை நடத்த, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

மனு, நீதிபதிகள் ஆர். சுப்ரமணியன், சி.குமரப்பன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, 'கடந்த பிப்ரவரியில் அளித்த விண்ணப்பத்தின் மீது, தேர்தல் ஆணையம் இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?' என, கேள்வி எழுப்பி இருந்தனர்.

இதையடுத்து வழக்கு, நேற்று விசாரணைக்கு வந்தது. தேர்தல் ஆணையம் சார்பில் வழக்கறிஞர் நிரஞ்சன் ஆஜராகி, "மனுதாரரின் விண்ணப்பம் தொடர்பாக, அ.தி.மு.க.,வுக்கு நோட்டீஸ் அனுப்பி பதில் பெறப்பட்டுள்ளது. அதனால், மனுதாரர் கோரிக்கை மீது விரைவில் முடிவெடுக்கப்படும்," என்றார்.

பன்னீர்செல்வம் தரப்பில், மூத்த வழக்கறிஞர் அரவிந்த் பாண்டியன், வழக்கறிஞர் திருமாறன் ஆகியோர் ஆஜராகி, "இந்த விவகாரத்தில் எங்கள் தரப்புக்கு நோட்டீஸ் அளிக்கப்படவில்லை; எங்களையும் கேட்டுத்தான், இந்த விஷயத்தில் தேர்தல் கமிஷன் முடிவெடுக்க உத்தரவிட வேண்டும்," என்றனர்.

அதைத்தொடர்ந்து, மனுதாரரின் விண்ணப்பம் குறித்து, நான்கு வாரங்களில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்க, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.